
SINCE 2013
We Shine Academy ®
guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM
LIVE
9 PM
UNIT 6
THIRUKURAL
திருக்குறள் – வாழ்வின் வழிகாட்டி!
"அறத்துப்பால் – பொருட்பால் – காமத்துப்பால்"
வாழ்வை வளப்படுத்தும் 1330 குறட்பாக்கள்!
CLASS 14
IMPORTANT FACTS, KEY POINTS & EXAM STRATEGY!
வெற்றி நிச்சயம்!
We Shine Academy
ANANDHAVELAN FACULTY
WESHINE ACADEMY

1. According to Valluvar, in which way, a man should speak in day to day life? Which statement is correct?
(A) Sweet speech with cheerful countenance
(B) To say disagreeable things when agreeable are at hand, is like eating unripe fruit when there is ripe
(C) When does he use harsh words who sees the pleasure which sweet speech gives
(D) Sweet speech will give pleasure both in this world and in the next

எவ்வாறு அன்றாட வாழ்க்கையில் ஒருவன் பேச வேண்டுமென்று வள்ளுவர் கூறுகிறார்? எந்த கூற்று சரியானது?
(A) இனிய சொல்லே உள்ளன்புடன் கூறுவதே அறம்
(B) இன்சொல் பேசாமல் கடுஞ்சொற் கூறுதல் பழத்தைத் தின்னாமல் காயைத் தின்பது போலாகும்
(C) இன்சொல் இன்பத்தைத் தருவதைக் கண்டும் கடுஞ்சொல் பேசுவது ஏன்?
(D) இனிய சொற்கள் இருபிறப்பிலும் இன்பந்தரும்

2. "________, ________, ________ these three for aye to rulers of the land belong". In the above Thirukural the word "These three" means

(A) Education, wealth, bravery

(B) Virtue, wealth, bliss

(C) Sleepless promptitude, knowledge, decision making

(D) Love, Decency, Affection

"________, ________, ________ இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு.

மேற்காணும் திருக்குறளில் இடம்பெறும் 'இம்மூன்றும்' என்னும் சொல் குறிப்பவை

(A) கல்வி, செல்வம், வீரம்

(B) அறம், பொருள், இன்பம்

(C) தூங்காமை, கல்வி, துணிவு

(D) அன்பு, பண்பு, பாசம்

3. "Dare to do a thing.... .....it is shameful to say" As per the above Thirukkural, how should we enter an action?
(A) After accumulating enormous wealth
(B) After charity
(C) After a mature thought
(D) At an appropriate time

"________துணிக கருமம் துணிந்த பின் ________என்பதிழுக்கு" எவ்வாறு ஒரு செயலில் ஈடுபடவேண்டும் என திருவள்ளுவர் மேற்கூறிய குறளில் அறிவுறுத்துகிறார்?
(A) நிறையப் பொருள் சேர்த்த பிறகு
(B) தானம் செய்த பிறகு
(C) நன்றாகச் சிந்தித்து அதற்குப் பிறகு
(D) தக்க காலமறிந்து

4. "To use .....is to make choice of unripe fruits to ripe fruits". In the above Thirukkural, according to Thiruvalluvar which one, when spoken, is equivalent to choosing unripe to ripe fruits?

(A) Truth instead of falsity

(B) Rebirth instead of the current birth

(C) Bitter words instead of sweet words ✓

(D) Talking about arrogance instead of humanity

"........கூறல் கனியிருப்பக்காய் கவர்ந்தற்று" இக்குறளில் திருவள்ளுவர், "எதைக் கூறுவது கனியிருக்கும் போது காயைக் கவர்வதற்கு ஒப்பாகும்" என்கிறார்?

(A) உண்மையிருக்கப் பொய்மை கூறல்

(B) இம்மை இருக்க மறுமை பற்றிக் கூறல்

(C) இனியவை இருக்க இன்னாதது கூறல்

(D) அடக்கமுடைமைக்குப் பதிலாக அடக்கமின்மை பற்றிப் பேசுவது

5. Whom does Valluvar call a fool, though he is learned and scholarly?
(A) One who fears to talk in the assembly of the learned
(B) One who does not get along with the society
(C) One who fears to go to the battlefield
(D) One who fears the rich

பலகற்றும் அறிவிலாதார் என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
(A) கற்றோர் அவையில் பேச அஞ்சுகின்றவரை
(B) உலகத்தோடு ஒத்து நடக்காதவரை
(C) போர்க்களத்திற்குச் செல்ல அஞ்சுகின்றவரை
(D) செல்வந்தரைக் கண்டு அஞ்சுகின்றவரை

6. "________ These four a light of dreaded kings reveal" What are the four virtues of a King according to Thiruvalluvar?

(A) Creation, Production, Protection, Planning

(B) Morality, Wealth, Happiness, Eternal dwelling place

(C) Beneficience, Benevolence, Rectitude and care for his people

(D) All the above

"________ நான்கும் உடையானாம் வேந்தர்க்கு ஒளி", என வள்ளுவர் எவற்றை வேந்தனுக்குக் கூறுகிறார்?

(A) இயற்றல், ஈட்டல், காத்தல், காத்தவகுத்தல்

(B) அறம், பொருள், இன்பம், வீடு

(C) கொடை, கருணை, நீதி, தளர்ந்த குடிகளைக் காத்தல்

(D) மேற்கண்ட அனைத்தும்

7. What does the following Thirukkural reiterate? "Who with deceitful mind in false way walks of covert sin, The five-fold elements his frame compose, deride within" ("Vanja manathan Paditrolukkam Boothangal Aainthum agathe nagum")

(A) False respect
(B) False truth
(C) False behaviour
(D) False pretence

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் – இதில் வலியுறுத்தப்படுவது எது?

(A) போலி மரியாதை
(B) போலி உண்மை
(C) போலி ஒழுக்கம்
(D) போலி நடிப்பு

8. How does Thiruvalluvar guide us to overcome trouble?
(A) Accepting trouble
(B) Fighting trouble
(C) Giving trouble to the trouble
(D) Feeling Remorse for the trouble

துன்பத்தை எவ்வாறு வெல்ல வேண்டும் என்று திருவள்ளுவர் நெறிப்படுத்துகிறார்?
(A) அப்படியே ஏற்றுக்கொள்ளுதல்
(B) எதிர்த்துப் போராடுதல்
(C) துன்பத்திற்குத் துன்பம் கொடுத்தல்
(D) துன்பத்தின் போது வருந்துதல்

9. "_________ Irandum Thangaa Viyanulagam Vaanam Vazhangadhu enin" (Though the wide world lease _________ and _________ If heaven its watery treasures cease to dispense) What are the two good deeds that will not happen according to this kural?
(A) Charity, Love (Dharmam, Anbu)
(B) Gifts, Austerities (Dhaanam, Thavam)
(C) Penitence, Pleasure (Thavam, Inbam)
(D) Virtue, Money (Aram, Porul)

"_________ இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின்"
மேற்காணும் திருக்குறள் எவ்வினைகள் நடைபெறாது என்று கூறுகிறது?
(A) தர்மம், அன்பு
(B) தானம், தவம்
(C) தவம், இன்பம்
(D) அறம், பொருள்

10. Whom does Valluvar refer to as blocks in the kural "Arampolun koormaiyar renu marampolvar" ("Though sharp their wit as file, as blocks they must remain..")
(A) Those who speak useless words
(B) Those who are void of humane courtesy
(C) Those who do not have love in their hearts
(D) Those who covet others things

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்" மரம் போன்றவர்கள் என்று வள்ளுவரால் குறிப்பிடப்படுபவர் யார்?
(A) பயனில் சொல் பேசுபவர்
(B) மக்கள் பண்பு இல்லாதவர்
(C) அகத்தில் அன்பு இல்லாதவர்
(D) பிறரின் பொருளுக்கு ஆசைப்படுபவர்

11. According to Thiruvalluvar 'what is friendship with the good' compared to?
(A) Having friends who make our heart happy
(B) Having books that give perpetual delight
(C) Having a face that shows anger
(D) Having a staff that measures one's friends

பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு எதைப் போன்றது என திருவள்ளுவர் கூறுகிறார்?
(A) அகநக நட்பது போன்றது
(B) நவில்தொறும் நூல் நயம் போன்றது
(C) கடுத்தது காட்டும் முகம் போன்றது
(D) கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல் போன்றது

12. The saying "Thirukkural" has a balanced religious quality is because
1. People from all religions say that it belongs to them
2. Because people who say there is God and people who say there is no God accept it wholeheartedly
3. It is beyond Type, caste, religion, class
4. Because it writes about ethics and knowledge needed for human race.
(A) Only 1 is right
(B) Only 2 is right
(C) Only 3 and 4 are right
(D) All the above are right

'சமய நடுநிலைப் பண்பு' கொண்டது திருக்குறள் என்பார் இக்கூற்றுக்குக் காரணம்
எல்லாச் சமயத்தவரும் இது எம் நூல் என்று கூறும் சிறப்புப் பெற்றதால்
கடவுள் உண்டு என்பவர் மட்டுமின்றி இல்லை என்பவரும் உவந்து ஏற்கும் சிறப்புப் பெற்றதால்
இனம், சாதி, சமயம், வகுப்பு எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதால்
மனித இனத்திற்குப் பொதுவான ஒழுக்கமும், அறிவும் அறிவுறுத்தப்படுவதால்
(A) 1 மட்டும் சரி
(B) 2 மட்டும் சரி
(C) 3 மற்றும் 4 மட்டும் சரி
(D) அனைத்தும் சரி

13. "One's knowledge depends on how much he learns" – What is the simile that Thiruvalluvar uses in this meaning?
(A) When water flows like a flood
(B) In sandy soil, when deep you delve, you reach the springs below
(C) When flowers, in barren soil, on sapless trees, shall blow
(D) Like staff in hand of him in slippery ground

'மக்கள் கல்வி கற்ற அளவிற்கு அறிவு ஊறும்' – இப்பொருளுக்குத் திருவள்ளுவர் கூறும் உவமை எது?
(A) வெள்ளத் தனைய மலர்நீட்டம்
(B) தொட்டனைத் தூறு மணற்கேணி
(C) வற்றல் மரம் தளிர்த்தற்று
(D) இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல்

14. "The compassion to share with and patronize lives is a primary virtue praised by many scriptures". According to Thiruvalluvar, which of the following is considered the primary virtue of life?

(A) Helping others
(B) Loving others
(C) Sharing food with others
(D) Speaking lovingly to others

அறநூல்கள் கூறும் அறங்களில் எல்லாம் தலையாய அறம் என்று திருவள்ளுவர் எதனைக் கூறுகிறார்?

(A) உதவி செய்தல்
(B) அன்பு பாராட்டுதல்
(C) பகுத்துண்ணுதல்
(D) இன்சொல் கூறுதல்

15. What does the word 'Thuppakki' mean for Thiruvalluvar in this Kural? "Thupparku Thuppaya Thuppakki Thupparku Thuppaya Thoovum Mazhai" (The rain makes pleasant food for eaters rise; As food itself, thirst-quenching draught supplies)

(A) Mazhai Neer (Rain Water) (B) Paadhukaathal (Safety)

(C) Undaakuthal (Produce) (D) Unavu (Food)

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை'
திருவள்ளுவர் 'துப்பாக்கி' என்ற சொல்லிற்கு என்ன பொருள் காண்கிறார்?

(A) மழைநீர் (B) பாதுகாத்தல்

(C) உண்டாக்குதல் (D) உணவு

16. The meaning of the chapter not Coveting?

(A) Not feeling shy
(B) Not belittling others
(C) Not begging from others
(D) Not desiring others things

'வெஃகாமை' என்ற அதிகாரத் தலைப்பின் பொருள்

(A) வெட்கம் கொள்ளாமை
(B) பிறரை இகழாமை
(C) பிறரிடம் இரந்து வாழாமை
(D) பிறர் பொருள்மேல் ஆசை கொள்ளாமை

17. 'Sire greatest boon on son confers,... to fill the highest seat' What is the debt of a father to his son according to this Thirukkural?
(A) To amass wealth
(B) To make him a bravest person
(C) Precedence in the assembly of the learned
(D) To give charity

'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி' – எனும் திருக்குறளில் தந்தை மகனுக்குச் செய்யும் கடனாகக் குறிப்பிடப்படுவது
(A) பொருள் சேர்த்து வைத்தல்
(B) வீரனாக உருவாக்குதல்
(C) கற்றவர் சபையில் முந்தி இருக்கச் செய்தல்
(D) தானம் செய்தல்

18. Who griefs confront with meek, ungrieving heart?
(A) The one who makes sorrow suffer
(B) The one who gets dejected in sorrow
(C) The one who escapes sorrow
(D) The one who laughs onlooking sorrow

இடும்பைக்கு இடும்பை படுப்பர் – யார்?
(A) துன்பத்திற்குத் துன்பம் தருபவர்
(B) துன்பம் கண்டு துவள்பவர்
(C) துன்பம் கண்டு விலகுபவர்
(D) துன்பம் கண்டு சிரிப்பவர்

19. Sukiranidhi, Manunool has been followed by Thirukural say some but this is refused and _________ says that Thirukural is the first book.

(A) Nakkiranar (B) Avaiyaar
(C) Manakuvar (D) Parimelazakar

சுக்கிரநீதி, மனுநூல் முதலியவற்றின் வழி நூல் திருக்குறள் என்பாரின் கூற்றை மறுத்து திருக்குறள் முதல் நூலே என்றவர்

(A) நக்கீரனார் (B) ஔவையார்
(C) மணக்குவர் (D) பரிமேலழகர்

20. According to Valluvar the good of the wealth obtained is to live

(A) Encircled by Relatives
(B) Encircled by Enemies
(C) Encircled by Scholars
(D) Encircled by Kinds

ஒருவன் செல்வம் பெற்றதால், பெற்ற பயனாக வள்ளுவம் உரைப்பது யாது?

(A) சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்
(B) பகைவரால் சுற்றப்பட ஒழுகல்
(C) சான்றோரால் சுற்றப்பட ஒழுகல்
(D) மன்னரால் சுற்றப்பட ஒழுகல்

21. Which act of the king reduces his wealth?
(A) Confiscated things from a thief
(B) Tears of the people ruled by a dictator
(C) Killing people professionally
(D) Collecting too much of taxes from people

மன்னனின் செல்வத்தைத் தேய்க்கும் படை எது?
(A) களவன் பொருளைக் கைப்பற்றுதல்
(B) கொடுங்கோன்மையின் காரணமாக ஏற்பட்ட கண்ணீர்
(C) கொல்லுதல் தொழிலை மேற்கொள்ளுதல்
(D) மக்களிடம் அதிக வரி வசூலித்தல்

22. Thiruvalluvar compares those who cannot express what they have learnt to others to

(A) flowers without fragrance
(B) flowers without a good shape
(C) flowers without colour
(D) flowers without freshness

தாம் கற்றதைப் பிறருக்கு எடுத்துக்கூற இயலாதவரை திருவள்ளுவர் எவ்வாறு உவமிக்கிறார்?

(A) மணம் வீசாத மலர்
(B) அழகற்ற மலர்
(C) நிறமற்ற மலர்
(D) பசுமையற்ற மலர்

23. "_________ men to share his meal. The hand of hunger's sickness sore shall never feel". In the above Thirukkural, whom the hunger never affects?

(A) A rich person
(B) A virtuous person
(C) A saint
(D) One who shares the food with others

________ ________ ________ பசியென்னும் தீப்பிணி தீண்ட லரிது.
மேற்கண்ட குறள் யாரைப் பசிப்பிணி தீண்டாது என்கிறது?

(A) செல்வந்தரை
(B) பண்பாளரை
(C) தவத்தினரை
(D) பகுத்துணபவரை

24. "A crow will conquer owl in broad daylight; The king that foes would crush, needs fitting time to fight". What is the main idea of this Thirukural?

(A) Importance of time
(B) Victory of crow
(C) Owl's failure
(D) Victory of kings

"பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" – இக்குறள் உணர்த்தும் கருத்து யாது?

(A) காலத்தின் முக்கியத்துவம்
(B) காக்கையின் வெற்றி
(C) கூகையின் தோல்வி
(D) வேந்தர்களின் வெற்றி

25. "Call that a gift to needy men thou dost dispense, All else is void of good, seeking for recompense." The meaning of "seeking for recompense" according to Thiruvalluvar is

(A) To pity poor people

(B) To follow virtuous path

(C) To return the measured goods borrowed from neighbours

(D) Feeling of greatness

வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீர் துடைத்து. இக்குறட்பாவில் "குறியெதிர்ப்பை" என திருவள்ளுவர் உரைப்பது

(A) ஏழைகளிடம் இரக்கம் கொள்ளுதல்

(B) அறவழி நடத்தல்

(C) அண்டை வீட்டாரிடம் அளவு குறித்து வாங்கிய பொருளைத் திரும்பக் கொடுத்தல்

(D) பெருமை கொள்ளுதல்

26. "That is a land that yields increase ....." What is the message in this Thirukkural?

(A) Policies of a best country
(B) A country's Resources
(C) Problems in a country
(D) Policies of a bad country

"நாடென்ப நாடா வளத்தன" என்ற குறளில் கூறப்படும் செய்தி

(A) நல்ல நாட்டிற்கான இலக்கணம்
(B) நாட்டின் வளம்
(C) நாட்டில் ஏற்படும் தீங்கு
(D) தீய நாட்டிற்கான இலக்கணம்

27. "Those who've helped you in distress" – What kind of friendship Thiruvalluvar mention here?
(A) Friendship of Learned Person
(B) Friendship of Cruel Person
(C) Friendship of Wise Person
(D) Friendship of a person who helped you in your troubles

'விழுமந் துடைத்தவர் நட்பு' – என வள்ளுவர் எத்தகைய நட்பைக் குறிப்பிடுகிறார்?
(A) கற்றோர் நட்பு
(B) துன்பம் கொடுத்தவர் நட்பு
(C) சான்றோர் நட்பு
(D) துன்பம் நீக்கிய நல்லோர் நட்பு

28. The book called as "The Veda of the Tamils" is

(A) Devaram (B) Thiruvasagam

(C) Thirukural (D) Naladiar

தமிழர்களின் வேதம் என்று அழைக்கப்படும் நூல்

(A) தேவாரம் (B) திருவாசகம்

(C) திருக்குறள் (D) நாலடியார்

29. Who said that, "All lives are alike at birth"?

(A) Kambar
(B) Ilangovadigal
(C) Thirumoolar
(D) Thiruvalluvar

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' – என்றவர்

(A) கம்பர்
(B) இளங்கோவடிகள்
(C) திருமூலர்
(D) திருவள்ளுவர்

30. 'Alive was he yesterday, but not today. It is a marvel in the world's way'. What is the meaning of this Thirukural?

(A) Everything is permanent in this world.

(B) Nothing is permanent in this world.

(C) Birth and Death is natural.

(D) The world is a proud place

"நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு" என்ற குறள் கூறும் கருத்து யாது?

(A) உலகம் நிலைத்தது

(B) உலகம் நிலையில்லாதது

(C) பிறப்பும் இறப்பும் இயற்கை

(D) உலகம் பெருமையுடையது

31. Whose quality is it to have courage, a liberal hand, wisdom and energy?

(A) Quality of a King
(B) Quality of a Minister
(C) Quality of a Soldier
(D) Quality of a Poet

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கு குணங்களும் இடைவிடாது நிற்றல் யாருடைய இயல்பு?

(A) அரசனது இயல்பு
(B) அமைச்சனது இயல்பு
(C) வீரனது இயல்பு
(D) புலவரது இயல்பு

32. Thiruvalluvar refers to the last stage of the uneducated?
(A) Noolgalai Katru Adhigam Peasupaver (who read texts and talk too much)
(B) Noolgalai Katru Peasa Maruppavar (Refusal to read texts)
(C) Noolgalai Katru Kondiruppavar (one who reads the text)
(D) Noolgalai Katru Avaikku Anjubavar (Read the books and Afraid to speak in the congregation)

'கல்லாதவரின் கடை' என்று வள்ளுவர் யாரைக் கூறுகிறார்?
(A) நூல்களைக் கற்று அதிகம் பேசுபவர்
(B) நூல்களைக் கற்று பேச மறுப்பவர்
(C) நூல்களைக் கற்றுக் கொண்டிருப்பவர்
(D) நூல்களைக் கற்று அவைக்கு அஞ்சுபவர்

33. ________ and ________ error's triple tyranny is o'er. Their very names for aye extinct, then pain shall be no more. In this Thirukural what three things that far away from human being?

(A) Lust, Innocent, Dizzy (B) Envy, Aspiration, Innocent

(C) Nimpiri, Dizzy, aspiration (D) Dizzy, Aspiration, Lust

________ ________ ________ இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய். மேற்காணும் திருக்குறளில் எம்மூன்றும் கெட நோய் கெடும் எனகிறார் வள்ளுவர்?

(A) காமம், வெகுளி, மயக்கம் (B) அழுக்காறு, அவா, வெகுளி

(C) நிம்பிரி, மயக்கம், அவா (D) மயக்கம், அவா, காமம்

34. What does the word 'Irupunal' mean in this Thirukural? "Irupunalum Vaaindha malaiyum Varupunalum Vallaranum Naatirkku Uruppu" (The constituents of a kingdom are the two waters well situated hills and an undestructible fort.)

(A) Aatru neer, Kinatru neer (River water, Well water)
(B) Aatru neer, Kulathu neer (River water, Pond water)
(C) Mazhai neer, Kinatru neer (Rain water, Well water)
(D) Kadal neer, Mazhai neer (Sea water, Rain water)

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" – இந்த திருக்குறளில், 'இருபுனல்' என்பது யாது?

(A) ஆற்று நீர், கிணற்று நீர்
(B) ஆற்று நீர், குளத்து நீர்
(C) மழை நீர், கிணற்று நீர்
(D) கடல் நீர், மழை நீர்

35. "Too great a load of even peacock feathers will break The axle of the Cart" What advice does Thiruvalluvar give through the above kural?

(A) Don't collect too much taxes
(B) Don't punish severely
(C) Don't go beyond your limits
(D) Don't give strenuous work

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.
இக்குறள் வழி திருவள்ளுவர் கூறும் அறிவுரை யாது?
(A) அதிகம் வரி வசூலித்தல் கூடாது
(B) கடுமையான தண்டனை வழங்குதல் கூடாது
(C) தன் சக்தியின் அளவை கடத்தல் கூடாது
(D) அதிகம் வேலை வழங்குதல் கூடாது

36. 'Dare to do a thing ...........' ........... it is shameful to say. As per the above Thirukkural how should we enter an action?

(A) After accumulating enormous wealth
(B) After doing sacrifice
(C) After deep thinking
(D) At an appropriate time

'........... துணிக கருமம் துணிந்த பின்'
........... என்ப திழுக்கு.

எவ்வாறு ஒரு செயலில் ஈடுபட வேண்டும் எனத் திருவள்ளுவர் மேற்கூறிய குறளில் அறிவுறுத்துகிறார்?

(A) நிறையப் பொருள் சேர்த்த பிறகு
(B) தானம் செய்த பிறகு
(C) நன்றாகச் சிந்தித்து அதற்குப் பிறகு
(D) தக்க காலமறிந்து

37. '...........' Foeman's insolence o'er grown To lop away no keener steel is known '...........' What does Thiruvalluvar mean?

(A) Wealth
(B) Knowledge
(C) Intelligence
(D) Bravery

'...........' செறுநர் செருக்கு அறுக்கும்
எஃகு அதனின் கூரியது இல் – என வள்ளுவர் குறிப்பிடுவது?

(A) செல்வம்
(B) அறிவு
(C) கேள்வி ஞானம்
(D) வீரம்

38. Who are the ones who brave the FATE? "Oozhaiyum uppakkam kaanpavar" – yaar?

(A) Learned (B) Young people

(C) Diligent people (D) Lazy people

'ஊழையும் உப்பக்கம் காண்பவர்' – யார்?

(A) சான்றோர் (B) இளையோர்

(C) விடாமுயற்சி உடையோர் (D) சோம்பேறி

39. What Thiruvalluvar says are the qualities of an Ambassador?
(A) Knowledge, Origin, Education
(B) Love, Knowledge, Clarity of speech
(C) Duty, Knowing the fitting time, Knowing the place
(D) Purity, Resources, Courage

ஒரு தூதுவனின் குணங்களாகத் திருவள்ளுவர் எவற்றைக் கூறுகிறார்?
(A) அறிவு, தோற்றம், கல்வி
(B) அன்பு, அறிவு, தெளிந்த பேச்சு
(C) கடமை, காலமறிதல், இடமறிதல்
(D) தூய்மை, துணைமை, துணிவு

40. What is the meaning conveyed through the word "extinguish"? With ghee extinguish fire! It will prove harder by scandal to extinguish love.

(A) Life (B) Put out (C) System (D) Expertise

"நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்"
என்னும் குறளில் 'நுதுப்பேம்' என்பதன் பொருள்

(A) ஆயுள் (B) அவித்தல் (C) முறைமை (D) பயில்வுடைமை

41. According to the Kural; "Gnalam Karuthinum kaikoodum" when a man wants to conquer the world what are the two things he should keep in mind?

(i) Wealth and Bravery/courage

(ii) Time and Place

(A) (i) only (B) (ii) only (C) (i) and (ii) (D) None of the above

"ஞாலம் கருதினும் கைகூடும்"

மேற்குறிய திருக்குறளின்படி ஒருவர் உலகம் முழுவதையும் கைப்பற்றக் கருதினால் அவர் எந்த இரண்டை அறிந்து செயல்பட வேண்டும்?

(i) செல்வமும் வீரமும் (ii) காலமும் இடமும்

(A) (i) மட்டும் (B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) (D) மேற்காணும் எவையும் அல்ல

42. "Thirukkural and Kamban's Epic would suffice to build a new civilization even if the present one is completely erased". Who said this?

(A) Caldwell (B) G.U. Pope

(C) Veeramamunivar (D) Ellis

உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும், மீண்டும் அதனைப் புதுபித்துவிடலாம் – என்று கூறியவர்

(A) கால்டுவெல் (B) ஜி.யு. போப்

(C) வீரமாமுனிவர் (D) எல்லீஸ்

43. According to Thiruvalluvar those who do not have good humane nature are compared to

(A) a skeleton covered by skin (B) a tree

(C) a body without soul (D) an animal

மக்கட் பண்பு இல்லாதவர்கள் எதற்குச் சமமானவர்கள்? என்கிறார் வள்ளுவர்.

(A) எலும்புதோல் போர்த்தவர் (B) மரம் போன்றவர்

(C) நடை பிணம் போன்றவர் (D) விலங்கு போன்றவர்

SINCE 2013 We Shine Academy Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK

44. What will be the sweetest one to those who have not heard the words of a baby according to Thiruvalluvar?
(A) Music of Flute, music of Yaazh (Yazhisai)
(B) Music of Flute, music of Drums
(C) Music of Yazh, music of Veena
(D) Music of Veena, music of Flute

வள்ளுவர் கூற்றுப்படி மழலைச் சொல் கேளாதவர் எவற்றை இனிது என்பார்கள்?
(A) குழலிசை, யாழிசை
(B) குழலிசை, மத்தள இசை
(C) யாழிசை, வீணையிசை
(D) வீணையிசை, குழலிசை

45. Who will be adored with clasped hands by all living beings?

(A) One who does penance
(B) King
(C) One who slays not, flesh rejects
(D) One who talks power of subtle penetrating sense

எல்லா உயிர்களாலும் கைகூப்பித் தொழப்படுபவர் யார்?

(A) தவம் செய்தவன்
(B) அரசன்
(C) கொல்லான் புலால் மறுத்தான்
(D) நுண்மான் நுழைபுலம் இல்லான்

46. Which is considered the Chief of all virtues as told by the sages in their writings according to Thirukural?
(A) Taking away the troubles of other living beings
(B) Not coveting others wives
(C) Being kind to other living beings
(D) To share your food and protect others

நூலோர் தொகுத்த அறங்களுள் தலையாய அறமாகத் திகழ்வது எது எனத் திருக்குறள் வலியுறுத்துகிறது?
(A) பிற உயிர்களின் துன்பத்தை நீக்குதல்
(B) பிறர் மனைவியை விரும்பாமல் இருத்தல்
(C) பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துதல்
(D) பகிர்ந்து உண்டு உயிர்களைப் பாதுகாத்தல்

47. "Budget for a surplus if possible, balances the budget at other times, but never budget for a deficit" – This statement was given by

(A) Mahatma Gandhi
(B) Dr. B.R. Ambedkar
(C) Thiruvalluvar
(D) Jawaharlal Nehru

"ஒரு நாடு அதன் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பட்சத்தில், அதன் வருமானம் குறைவாக இருந்தாலும் பாதகமில்லை" – இந்தக் கூற்றை கூறியவர்

(A) மகாத்மா காந்தியடிகள்
(B) டாக்டர். பி.ஆர். அம்பேத்கர்
(C) திருவள்ளுவர்
(D) ஜவஹர்லால் நேரு

48. Whom does Thiruvalluvar refer to as 'Thaalanmai illathavan'?
(A) Ookam illadhavan (one who lacks motivation)
(B) Dharmam Seiyadhavan (one who does not do charity)
(C) Vida Muyarchi illadhavan (one who lacks perseverance)
(D) Kobam kolladhavan (one who does not get angry)

'தாளாண்மை இல்லாதவன்' என்று திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?
(A) ஊக்கம் இல்லாதவன்
(B) தர்மம் செய்யாதவன்
(C) விடாமுயற்சி இல்லாதவன்
(D) கோபம் கொள்ளாதவன்

49. What does this simile mean: Agalvarai thangum Nilam pol ...... (As earth bears up the men ..........)

(A) Forbearance (B) Decorous conduct

(C) Friendship (D) Knowledge

'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல்' – இவ்வுவமை உணர்த்தும் பொருள்

(A) பொறையுடைமை (B) ஒழுக்கமுடைமை

(C) நட்புடைமை (D) அறிவுடைமை

50. Pickout correct statement

(i) Kural stresses the importance of knowledge and education

(ii) Kural stresses the importance of religion

(iii) Kural stresses the significance of art and dance

(iv) Kural stresses the importance of truth and modesty

(A) Both (i) and (ii)
(B) Both (ii) and (iii)
(C) Both (i) and (iv)
(D) Both (iii) and (iv)

சரியானதை தேர்வு செய்க.

(i) திருக்குறள் அறிவையும் கல்வியையும் வலியுறுத்துகிறது

(ii) குறள் மதத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது

(iii) குறள் கலை மற்றும் நடனத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது

(iv) குறள் வாய்மையையும் அடக்கத்தையும் வலியுறுத்துகிறது

(A) (i) மற்றும் (ii) ஆகியன
(B) (ii) மற்றும் (iii) ஆகியன
(C) (i) மற்றும் (iv) ஆகியன
(D) (iii) மற்றும் (iv) ஆகியன

# THANK YOU